**25.11.2019**

**அசல் வழக்கு எண்.** 245/2014

வா.சா.1 பாலசுப்பிரமணியன் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

பசுபதியம்மாள் பேய்க்குளம் கிராமத்தில் இறந்து விட்டார். 2ம் வாதி சுப்பாரெட்டி விருதுநகரில் 30 வருடங்களாக குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. 10 வருடங்களாக குடியிருந்து வருகிறார். 2ம் வாதிக்கு தற்போது 68 வயது இருக்கும். 2ம் வாதி ஆரம்ப காலத்தில் இருந்து விருதுநகர் டிப்போவில் வேலை பார்த்தார் என்றால் சரி. விருதுநகரில் வேலை பார்த்த காலத்தில் வாடகை வீட்டில் குடியிருந்தார் என்றால் சரி. 2ம் வாதி 34,35 வயதில் வேலைக்கு சேர்ந்திருப்பார். பசுபதியம்மாளின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. வா.சா.ஆ-2 ஆவணம் எனது அண்ணன் சுப்பாரெட்டியிடம் இருந்தது. வா.சா.ஆ-2 ஆவணம் பற்றி ஏற்பட்ட காலத்தில் எனக்கு விபரம் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி 20 வருடங்களுக்கு முன்பு தெரியும். எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ-2 ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை. வா.சா.ஆ-2 ஆவணத்தை பற்றி வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ-2 ஆவணத்தில் சுப்பாரெட்டியை பசுபதியம்மாள் தத்து எடுத்தார்கள். சுப்பாரெட்டியை கோபாலகிருஷ்ணன், சின்னகம்மாளும் தத்து கொடுத்தார்கள். கோபாலகிருஷ்ணனின் மனைவி சின்னகம்மாள். வா.சா.ஆ-2 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் பசுபதியம்மாளின் கணவர் உயிருடன் இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பசுபதியம்மாளின் கணவர் உயிருடன் இருந்ததை மறைத்து சுப்பாரெட்டி அவர்களின் குமாரத்தி பசுபதியம்மாள் என வா.சா.ஆ-2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-2 ஆவணமானது பசுபதியம்மாளின் கணவருக்கு தெரியாமலே ஏற்படுத்தப்/பட்டளதால் அது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. எங்களது சமூக வழக்கப்படி சுவீகாரம் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பசுபதியம்மாள் அவரது இறுதிக்காலம் வரை பேய்க்குளம் கிராமத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். பசுபதியம்மாளை சுப்பாரெட்டி எந்த காலத்திலும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பசுபதியம்மாளை சுப்பாரெட்டி பரமாரித்து வந்தார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணமானது வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரத்திற்கும் வா.சா.ஆ.9, வா.சா-ஆ.10 ஆவணத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் டிரஸ்ட் உருவவாக்குவது சம்மந்தமாக எனக்கு நோட்டீஸ் அனுப்பினார்கள் நான் வாங்கவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன விபரம உள்ளது என்று எனக்கு தெரியாததால் நான் தபால்காரரிடமிருந்து பெற்று கொள்ள மறுத்துவிட்டேன். 2ம் வாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்டாரா என்று எனக்கு தெரியாது. எனக்கு டிரஸ்ட் ஆரம்பிக்கும் வருடம் எந்த வருடம், எந்த மாதம் என்று எனக்கு தெரியாது. டிரஸ்ட் ஆரம்பித்த விபரம் 5,6 வருடங்களுக்கு முன்பு தெரியும். வழக்கு தாக்கல் செய்த 15 நாட்களுக்கு முன்பு தெரியவந்தது. சுப்பாரெட்டிக்கு வந்த வழக்கறிஞர் அறிவிப்பை என் வழக்கறிஞரிடம் காண்பித்தேன். சுப்பாரெட்டிக்கு வந்த வழக்கறிஞர் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சித்தி விநாயகர் கோவில் டிரஸ்ட் ஆரம்பிக்க பல முறை கேட்டும் மறுத்ததால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும் சம்மதம் தெரிவிக்காததால் பிரதிவாதிகள் தரப்பில் டிரஸ்ட் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. சித்தி விநாயகர் கோவில் ஸ்தாபனத்தை உருவாக்கிய

சுப்பாரெட்டியின் நல்ல நோக்கத்தை கெடுக்கும் நோக்கத்தில் டிரஸ்ட் அமைக்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. சுப்பாரெட்டியின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பிரதிவாதிகளால் டிரஸ்ட் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. டிரஸ்ட் ஆரம்பகாலத்திலிருந்தே இல்லை. 1936,1947 ஆவணங்களில் சுப்பாரெட்டி சித்தி விநாயகர் கோவில் டிரஸ்ட் என குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பசுபதியம்மாளுக்கு வாரிசுகள் இன்றி இருந்ததால் லிங்கம்மாளின் வாரிசுகளான பிரதிவாதிகள் பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எங்களை டிரஸ்ட்டில் தரப்பினராக சேர்க்க விருப்பமாக உள்ளனர் என்றால் டிரஸ்ட்டே தேவையில்லை. வா.சா.ஆ-7 ஆவணத்தை நான் பார்க்கவும் இல்லை அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. வா.சா.ஆ-7 ஆவணத்தில் சொத்து விபரங்கள் குறிப்பிடவில்லை என்றும் அதனை பொறுத்து செல்லாது என கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-7 ஆவணத்தை பொறுத்து பரிகாரம் கோரியிருப்பது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சித்தி விநாயகர் கோவிலில் நாங்கள் சாமி கும்பிடுவதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் தடுக்கவில்லை. நாங்கள் வழக்கில் கோரியுள்ள பரிகாரமும் வழக்கும் தவறானது என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்றால் சரியல்ல.